**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 58/2009**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **26.02.2026** |
| **பெயர்** | **சற்குணம்** |
| **த/பெ** | **கணபதி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.24.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ரெட்டில்ஸ், பாடியநல்லூரில் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். என் மனைவி பெயர் சுமதி. எங்களுக்கு 2 குழந்தைகள். அவர்கள் விக்னேஷ் மற்றும் ஐஸ்வர்யா. நான் மேற்சொன்ன விலாசத்தில் தான் குடியிருந்து வருகிறேன். வாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் சொத்தில் நான்அத்துமீற் சென்றதற்கு அவர் வழக்கு தாக்கல் செய்திருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் என் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வீட்டு வரி ரசீது, குடிநீர் வரி ரசீது, மின்சார அட்டை மற்றும் குடும்ப அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ1 ஆவணத்தில் என் தந்தை பெயர் திருத்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் பின்பக்கத்தில் கூரை வீடு என்று குறிப்பிடாமல் கூரை என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ெஹக்டேர் 3.54.5 ஏர்ஸ் (ஏக்கர் 8.75 செண்ட்) மேய்காலாக குறிப்பிட்டுள்ளது அது பல நபர்களுக்கு உரியது என்றும் பல்வேறு நபர்கள் அதில் வீடும் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் குடியிருப்பதற்கான அரசு ஆதாரங்கள் எதுவும் நீதிமனற்த்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனது பதிலுரையில் வாதிகள் 10 செண்ட் நிலத்தில் குடியிருக்கவில்லை 2 செண்ட் நிலத்தில் மட்டும் தான் குடியிருக்கிறார் என்று குறிப்பிட்டு இருக்கும்பட்சத்தில் அதற்கான சர்வேயர் நியமிக்க ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கமாக எனக்கு 5 செண்ட் நிலம் உள்ளதாக என் பிரமாணவாக்குமூலத்தில் மட்டும் குறிப்பிட்டுள்ளேன் எனது பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 5 செண்ட் நிலம் எனக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசு ஆவணமான பி–மெமோ வை தாக்கல் செய்துள்ளேன். 10 செண்ட் நிலத்தை 5 செண்ட் நிலத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்று குறிப்பிட்டு இருக்கும்பட்சத்தில் அதனை மீட்க கோரும் வகையில் பிரதிவாதிகள் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ 2 வழக்கு சொத்திற்கான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எனது பதிலுரையிலும் எனது பிரமாணவாக்குமூலத்திலும் 23.02.2009, 26.02.2009, 05.03.2009 இந்த 3 நாட்களில் வாதியின் சொத்தில் நான இடையூறு செய்யவில்லை என்று நான் குறிப்பாக மறுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பல ரவுடிகளோடு தொடர்பில் உள்ள காரணத்தினால் வாதியின் சொத்தை அபகரிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு பக்கத்து வீடு இல்லை என்றும் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதியும் கூட்டாளிகள் என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் அவர் தாய்மாமன். 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை எனக்கு கொடுத்துவிட்டார் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

5. வாதியின் ஸ்வாதீனத்தில் இடையூறு செய்த காரணத்தினால் எங்கள் மீது சோழவரம் காவல்நிலையத்தில் வாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்து மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.45.p.m.**